## சுருக்கம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் – தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய திட்டங்களில் வீடு/மனை / குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்கள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகையினை தாமாக முன்வந்து முழுவதுமாக செலுத்தும் பயனாளிகளுக்கு மாதத்தவணை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி, முதலாக்கத்தின் மீதான வட்டியினை முழுவதுமாகவும் மற்றும் நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியினை வருடத்திற்கு 5 மாதங்களுக்கு கணக்கிட்டு தள்ளுபடி செய்ய அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நி.எ3(1)) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.104

**நாள்: 15.06.2017**
**ஹேவிளம்பி ஆனி 1**
**திருவள்ளுவர் ஆண்டு 2048**

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.37, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் (நி.எ4(1) துறை, நாள் 14.2.2011.
2. அரசாணை (நிலை) எண்.215, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் (நி.எ4(1) துறை, நாள் 28.9.2012.
3. அரசாணை (நிலை) எண்.115, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் (நி.எ4(1)துறை, நாள் 31.5.2013.
4. அரசாணை (நிலை) எண்.83, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் (நி.எ4(1)துறை, நாள் 19.5.2014.

மேலும் படிக்க:

5. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை செ.கு.எண்.135, நாள் 17.09.2016.
6. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.ஒதுக்கீடு I–6/8697/2009, நாள் 5.10.2016, 31.10.2016 மற்றும் 30.3.2017.

---

ஆணை:-

மேலே 5ல் படிக்கப்பட்ட அறிவிப்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17.09.2016 அன்று கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்:–

"தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கீடு பெற்றவர்களின் நலன் கருதி, அவர்கள் விற்பனைப்பத்திரம் பெறும் வகையில் ஏற்கனவே 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில், வட்டி தள்ளுபடி திட்டம் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 14,992 ஒதுக்கீடுதாரர்கள் பயன் பெற்றுள்ளனர். வாரியத்தில் மனை, வீடு ஒதுக்கீடு பெற்றவர்கள் 23,600 பேர் இன்னமும் விற்பனைப்பத்திரம் பெற இயலவில்லை என்பதனை அறிந்து, அவர்களும் விற்பனைப்பத்திரம் பெறும் வகையில் அவர்களின் வட்டிச் சுமையை குறைக்க, வட்டிச்சலுகை திட்டம் ஒன்றினை செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகையினை தாமாக

முன்வந்து முழுவதுமாக செலுத்தும் பயனாளிகளுக்கு மாதத்தவணை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி மற்றும் முதலாக்கத்தின் மீதான வட்டியினை முழுவதுமாகவும், நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியினை வருடத்திற்கு 5 மாதங்களுக்கு கணக்கிட்டு தள்ளுபடி செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது".

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே 6ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் தனது செயற்குறிப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்காகவும், விற்பனைப்பத்திரம் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணம் மற்றும் வாரியத்தின் நடைமுறைகளில் உள்ள குறைபாடுகளை நன்கு ஆராய்ந்து, அவற்றை களைவதற்கும், நடைமுறைகளை சீராக்குவதற்கும் தேவையான பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் பொருட்டு, உயர்மட்டக்குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டு வாரியத்தில் பல்வேறு நிகழ்வுகளில் வெவ்வேறு திட்டங்களில், நீண்டகாலமாக, விற்பனைப்பத்திரம் வழங்கப்படாமல் இருந்த, ஒதுக்கீடுதாரர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து, உயர்மட்டக்குழு அளித்த பரிந்துரைகளையும், அதன் மீது வாரியம் அளித்த பரிந்துரை மற்றும் தீர்மானங்களை விரிவாக விவாதித்து, பின்வரும் சலுகைகளை அளித்து மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டது:—

1. மாதத் தவணைக்கான அபராத வட்டி முழுமையாக தள்ளுபடி
2. வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டி முழுமையாக தள்ளுபடி
3. நிலத்திற்கான இறுதி விலை வித்தியாசத் தொகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 மாத வட்டித் தள்ளுபடி.
4. அரசு ஊழியர்களுக்கு அரசாணை (நிலை) எண்.174, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 07.02.1991-ன்படி வட்டிச் சலுகை
5. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கான ஒதுக்கீடுகளுக்கு விலையில் தற்போது நடைமுறையில் உள்ள 10 சதவீதம் மட்டும் வட்டி வசூலிப்பு.

பின்னர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கோரியதன் அடிப்படையில் மேலே இரண்டு முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகள் வழி இச்சலுகைகள் பல்வேறு காலகட்டங்களில் காலநீட்டிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன எனவும் தெரிவித்துள்ளார்.

3. தற்பொழுது, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில், வீடு / மனை / குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களில், வட்டி சுமையினால் விற்பனைப்பத்திரம் பெற்றிடாத ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டிச் சலுகை அளித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17.09.2016 அன்று ஆணையிடப்பட்டுள்ளதால், 23,600 ஒதுக்கீட்டுதாரர்கள் பயன்பெறும் வகையில் சுமார் ரூ.111.42 கோடி தள்ளுபடி செய்யும் பொருள் வாரியத் தீர்மானம் எண்.9.03, நாள் 31.1.2017ல் நிறைவேற்றப்பட்டது எனவும், வட்டி தள்ளுபடி செய்யும் அதிகாரத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநருக்கு அளிக்குமாறும், இச்சலுகையினை நடைமுறைப் படுத்துவதற்கான அரசாணையினை வழங்குமாறும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 2 மற்றும் 3-ல் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களால் 17.09.2016 அன்று அறிவிக்கப்பட்ட வட்டிச் சலுகை திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையினை தாமாக முன்வந்து முழுவதுமாக செலுத்தும் பயனாளிகளுக்கு மாதத்தவணை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி மற்றும் முதலாக்கத்தின் மீதான வட்டியினை முழுவதுமாகவும், நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியினை வருடத்திற்கு 5 மாதங்களுக்கு கணக்கிட்டு தள்ளுபடி செய்வதற்கான கருத்துருவினை வாரியக் கூட்டத்தில் வைத்து தீர்மானம் நிறைவேற்றி, வட்டி தள்ளுபடி செய்யும் அதிகாரத்தினை தற்போது அறிவிக்கப்பட்ட திட்டத்திற்கு உட்பட்ட வீட்டுவசதி வாரிய அலகுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், இச்சலுகையினால் வாரியத்திற்கு ஏற்படும் இழப்பினை வாரிய வருவாய் நிதியிலிருந்தே ஈடு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.30411, நிதி (வீ.வ(ம)ந.வ)/2017 நாள் 13.06.2017ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தர்மேந்திர பிரதாப் யாதவ்**
**அரசுச் செயலாளர்**

<u>பெறுநர்</u>
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை–35
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9
அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை–9
<u>நகல்:</u>
நிதி (வீட்டுவசதி / பொ.மா.க) த்துறை, சென்னை–9
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (அநமு1 /வ.செ) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

16/6/17
**பிரிவு அலுவலர்.**
16/6/17